# பெங்களூர் பஞ்ச லிங்க ஆலயம்

## சாந்திப்பிரியா



கர்னாடக மானிலமான பெங்களூரில் பல இடங்களில் மிகப் பழமையான ஆலயங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் மன்னன் இராஜராஜ சோழன் காலத்திய ஆலயமான பஞ்ச லிங்க சிவாலயம். பெங்களூரின் தென் பகுதியில் உள்ள இந்த ஆலயம் பொம்மனஹல்லி மற்றும் ஓசூர் செல்லும் பாதையில் உள்ள பேகூர் என்ற சிறு கிராமத்தில் உள்ளது. மிகக் குறுகிய சாலையில் அமைந்துள்ள ஆலயத்தில் ஐந்து சிவன் சன்னதிகள் உள்ளன. ஒவ் ஒரு சன்னதியிலும் ஒவ்ஒரு சிவ லிங்கம் உள்ளது. அவை ஒவ்ஒன்றும்

ஒரு குறிப்பிட்ட சக்தி பெற்றவை எனக் கூறுகின்றனர். ஒரு காலத்தில் பேகூர் என்ற இடம் சமிஸ்கிருத மற்றும் வேத பாடசாலைகளை கொண்டிருந்த பெருமை வாய்ந்த இடமாக இருந்துள்ளது. இந்த ஆலயம் 1300 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டு இருக்க வேண்டும். ஏன் எனில் அந்த ஆலயத்தை ஏறத்தாழ எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த குலோத்துங்க சோழன் கட்டியதாக கூறப்படுகின்றது.

பார்வதி சமேதகராக எழுந்தருளி உள்ள சிவபெருமான் தனது சன்னதியில் நாகேஸ்வரஸ்வாமி என்ற பெயரில் லிங்க வடிவில் அமர்ந்து உள்ளார். ஆலய அர்சகர்கள் தெரிவிக்கும் செய்தியின்படி அந்த சன்னதியில் காலையில் எழும் சூரிய ஒளி லிங்கத்தின் மீது விழும் வகையில் சன்னதி அமைந்து உள்ளது. நாகேஸ்வர லிங்க சன்னதியின் நேர் எதிரில் உள்ள நவரங்கா எனப்படும் பிராகார மேற் கூரையில் பலவிதமான யந்திரங்கள், அஷ்ட திசை பாலகர்கள் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டு உள்ளன. அதில் உள்ள யந்திரங்கள் மந்திர சக்தியினால் சக்தியூட்டப்பட்டவையாம். அதன் கீழ் நின்றபடி இருந்து அந்த லிங்கத்தை பிரார்தனை செய்யும் பொழுது ஏவல்கள், மன பயங்கள், பில்லி சூனியங்களினால் ஏற்படும் தொல்லைகள் விலகும் என்று கூறுகின்றனர். ஆனால் அந்த பிரார்தனையை எப்படி, எத்தனை நாட்கள் செய்ய வேண்டும் என்பதை அர்சகர்தான் கூறுவார்களாம். அந்த சன்னதியின் மற்றோரு சிறப்பு என்ன எனில் சூரிய பகவான் மேற்கு நோக்கியபடி லிங்கத்தைப் பார்த்திருக்கும் வகையில் அமைந்து உள்ளதுதான். மற்ற எந்த ஆலயத்திலும் இப்படியான அமைப்பு இல்லையாம்.

ஒரு சன்னதியில் சுமார் மூன்று அல்லது மூணரை அடி உயரமுள்ள ஒரு காளியின் சிலைக்கடியில் ஒரு அடி உயர சிவலிங்கம்

அமைக்கப்பட்டு உள்ளது. அந்த சன்னிதியில் உள்ள மேற் கூரையில் தாமரைப் போன்ற வடிவம் அமைந்துள்ளது. அதன் அடியில் நின்று கொண்டு பிரார்த்தனை செய்தால் குழந்தை பேறு கிடைக்கும், வழக்கு மன்ற தீர்ப்புக்கள் சாதகமாகும், எதிரிகள் விலகி ஓடுவர் என்று கூறுகின்றனர்.

இரண்டாம் சன்னதியில் தக்ஷிண காளி என்ற பெயரில் பார்வதி தேவி ஐந்தடி உயரத்தில் அமர்ந்து உள்ளாள். அவளை அங்கு பிரார்திப்பதின் மூலம் இரத்த சம்மந்தமான நோய்கள் விலகும், வாழ்வில் ஆனந்தம் கிடைக்கும் என்றும் கூறுகின்றனர்.

ஆலயத்தில் உள்ள மூன்றாம் சன்னதியில் காணப்படும் சுமார் மூன்று அடி உயர கருணேஷ்வரர் லிங்க சன்னதியில், ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி நின்றபடி வேண்டிக் கொள்வதின் மூலம் வயிற்று வலி, குடல் உபாதை, காது சம்மந்தப்பட்ட நோய்கள், நரம்பு தளர்ச்சி போன்றவை விலகுமாம்.

நான்காம் சன்னதியான நாகேஸ்வர லிங்க சன்னதியில் தொழில் விருத்தி அடையவும், தோல் சம்மந்தப்பட்ட நோய்களும் விலக பிரார்தனை செய்ய வேண்டுமாம்.

ஐந்தாம் சன்னதியான சோளேஸ்வர லிங்க சன்னதியில் நின்றபடி வேண்டினால் திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுமாம்.

ஆலயத்தில் காளிங்க நர்தனர், பகவான் கால பைரவர் , பார்வதி தேவி, கையில் லிங்கத்தை ஏந்திய பகவான் வினாயகர், சப்த ரிஷிகள் போன்றவர்களுக்கும் சிலைகள் உள்ளன. தினமும் இரவில் அஷ்ட திக்கு பாலகர்கள், ஐந்து தலை நாகமான காளிங்க நர்தனர்

மற்றும் சப்த ரிஷிகள் போன்ற அனைவரும் அங்கு வந்து சிவபெருமானை ஆராதிப்பதாக ஐதீகம் உள்ளது.

இந்த ஆலயம் அமைக்கப்பட்டதின் வரலாற்றுக் கதை இல்லை என்றாலும் அங்கு நிலவும் கிராமியக் கதை இது. ஒரு முறை அந்த பகுதியில் இருந்த மாபெரும் ரிஷி ஒருவர் தன்னுடைய பக்தனுக்கு ஒரு குடுவையில் தண்ணீர் தந்து எந்த இடத்தில் அதை தெளித்தாலும் அந்த இடம் பொன்னாகி விடும் என்று கூற அதை எடுத்துச் சென்றவன் கையில் இருந்த குடுவையில் இருந்து சில துளிகளை கரும்புத் தோட்டம் ஒன்றில் தெளிக்க அந்த இடம் பொன் ஆயிற்றாம். அந்த செய்தி குலோத்துங்க சோழனுக்கு தெரியவர அவன் அந்த குடுவையை வைத்திருந்தவனை அழைத்து வரச் சொல்லி அதன் விவரத்தைக் கேட்டார். ஆனால் குடுவையின் ரகசியத்தைக் கூறிவிட்டால் அதன் சக்தி போய் விடும் என அந்த ரிஷி கூறி இருந்ததினால் அந்த மனிதன் மௌனத்தை சாதிக்க கோபமுற்ற அரசன் அவனைக் கொன்று விட்டான். அதன் காரணமாக அவனுக்கு பிரும்மஹத்தி தோஷம் பிடித்தது. அதை நிவர்த்திக்க வேண்டும் எனில் குறிப்பிட்ட சில ஆலயங்களைக் கட்ட வேண்டும் என ஜோதிடர்கள் கூறியதினால் கட்டப்பட்டதே இந்த பஞ்ச லிங்க ஆலயம் என்று கூறப்படுகின்றது.

# Pancha Linga Temple, Bangalore

## Santhipriya



In Karnataka, the city of Bangalore has many of the oldest temples. One of them is the Pancha Linga Shiva Temple, a temple which dates back to the reign of King Rajaraja Chola. The temple is located in the southern part of Bangalore in a small village called Begur between Bommanahalli and Hosur which is at a short distance away from the famous Silk Board. The temple is located on a very narrow road and has five separate sanctums to Lord

Shiva. Each one of the sanctums inside the Panchalinga temple has unique Shiva Lings installed in them. The devotees offer prayers in each one of the sanctums for specific reasons as the Shiva Lings have been energized with chants of specific mantras to give relief accordingly, so tell the priests. Once upon a time, Begur was a place of great pride in having both Sanskrit and Vedic schools. This temple must have been built 1300 years ago by Kulothunga Chola who ruled in the 8th century.

In the main sanctum of Lord Shiva, he is seated as Lord Nageswaraswami. According to the temple priests, every day the morning rays of the sun fall on the Shiva Ling. On the upper roof of the opposite hall of this sanctum, also known as Navaranga, one can see several yanthras enshrined which are energized with chants of specific mantras. Besides those energized Yanthras, Ashta disa Palakas (meaning the guardians of all the directions ) have also been enshrined. It is stated that if one offer prayers standing below that roof, their mental anxiety, fear and evil effects of the black magic and sorcery would get removed. The initial pooja to be performed and the manner in which the prayer is to be performed would be explained by the priest there. Another special feature of the shrine is that it is situated in such a way that the Lord of Sun faces west. In no other temple one can see this position of Lord Sun.

In one of the five separate sanctums, one can see one foot Shiva Ling under the statue of Goddess Kali which is three feet in height. The roof of the sanctuary is shaped like a lotus. It is believed that the childless couple if offer worship to the Shiva Ling in that shrine they would beget children, the court cases would end in their favour, enemies would disappear.

In the second sanctum, a five foot high Goddess Parvati is seated in the name of Goddess Dashshina Kali. Those offering prayers to her would be rid of blood related diseases, and their torturous life would turn to that of life of happiness.

In the third of the sanctum called Lord Karuneshwara Linga sanctum, one can see a three foot high Shia Ling. One has to stand in a particular direction and offer prayers to get rid of stomach ache, intestinal ailments, ear ailments, nerve related diseases etc.

In the fourth of the sanctum a Shiva Ling has been installed in the name of Lord Nageswara. For advancement in the careers and relief from skin related diseases one offer prayers here.

It is believed that those who face hurdles in the marriage related issues, if offer prayers in the fifth of the five sanctums called Lord

Soleshwar, the hurdles would end soon and they would get married.

The temple also has statues of divines like Lord Ganesha, Sapta Rishis carrying the Shiva Ling in their hands, Kalinga Narthana (Divine serpent), Lord Kala Bhairav and Goddess Parvathi. It is said that every night the Ashta Dikku Palaks and divine five-headed serpent Kalinga Nartana and the Sapta Rishis visit this temple to offer prayers to Lord Shiva.

Although there are no historical evidances to reveal how this temple came up, according to a folklore, once upon a time there lived a great Rishi in this area who gave a pot of water to one of his disciples and told him that wherever the water from the pot was sprinkled, the entire water spots would turn into gold. The disciple sprinkled the water in the sugarcane field owned by him and the waterspots turned into gold. When the message reached the ears of the ruler Kulothunga Chola, he summoned the person and enquired how gold spots appeared in his sugarcane field. But the disciple of the Rishi who owned the pot of water remained silent and refused to reveal the mystic facts, lest the magic spell of the water would vanish. In fit of anger the King beheaded the person because of which he was afflicted with dreaded Brahmahathi Dosha. On the advice of the astrologers, he

constructed certain specific temples to get rid of the dosha and the Pancha Linga temple was one amongst them.